

# அமரர்.

# கனகசபாபதி கனகதுங்கம்

அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

## 23.10.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

பாச விளக்காய் இருந்து
எமையெல்லாம் நேசமோடு
அரவணைத்து சமூக சிந்தனையும்
கல்வியறிவும் தந்து ஒற்றுமையும்
உயர்வும் காட்டி கண்ணை இமை
காப்பதுபோல் காத்து
வந்தீர் பாசத்தோடும், பரிவோடும்
எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனின் திருவடிகளை
இறைஞ்சி இம்மலரைத் தங்கள்
பாதக்கமலங்களில்
நீரோடும் கண்களோடு நெஞ்சம்
நிறைந்த பாசத்தோடும்
காணிக்கையாக்குகின்றோம்.

\- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயம்
12 - 03 - 1944

அஸ்தமனம்
23 - 09 - 2014

# அமரர்.
# கனகசபாபதி கனகதுங்கம்

## திதி வெண்பா

'ஆண்டு ஜயமதினிலே ஆகுமது புரட்டாதித் திங்கள்
அருகிடும் அபரபட்ச அமாவாசைத் - திதிதனில்
கனகதுங்கம் இவ் புவிதனில் துறந்தே தான்
விண்ணுலகம் சென்றார் காண் '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனி மேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந்தாரே

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தாய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென் னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச் செய்துநவையறு காட்சி நல்கி
என்னையும டியனாக்கி யிருவனை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல்பா தபங்கயங்கள் போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.

## கனகசபாபதி கனகதுங்கம்

## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

திருகோணமலையில் கனகசபாபதி சுகிர்தமலர் தம்பதியினருக்கு குடும்பத்தில் மூன்றாவது மகனாகவும், கனகதாஸ்(கனடா), கனகமலர் (கொழும்பு), கனகசூரியம் (திருகோணமலை), கனகமணி (இந்தியா), கனகராணி(கனடா), கனகராஜ்*(கனடா), கனகேஸ்வரி(கனடா), கனகசுந்தரி (திருகோணமலை) கனகவதனா(கனடா) ஆகியயோரின் அன்புச் சகோதரருமாவார். 12.03.1944 இல் திருகோணமலை நகரில் பிறந்தார் இவர் தனது ஆரம்பக் கல்வியை ஸ்கந்தவரோயக் கல்லூரியில் கற்ற பின்னர் திருகோணமலை அர்ச் சூசையப்பர் கல்லூரியிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

இவர் சிறு வயதினிலேயே மிகவும் சுறுசுறுப்பாகவும் எக்காரியத்தையும் நேர்த்தியாகவும் செய்யும் சுபாவம் கொண்டவர் இவர் தனது வாழ்க்கைத் துணையாக பெரியசாமி, பார்வதி, தம்பதிகளின் மகளான செல்வராணியை 1976ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் திகதி திருமணம் செய்து மகிழ்வுடன் வாழ்ந்தார். இல்லற வாழ்வின் பயனாய் டினேஸ்பாபு, பிரசாந்த் ஆகிய இரண்டு புதல்வர்களுக்கு அன்புத் தந்தையுமானார் அவருடைய வாழ்வாதாரமான தொழிலாக வியாபாரம் செய்வதையே கடைப்பிடித்தார். எத்தொழிலாய் இருந்தாலும் அதனை நேர்மையுடன் செய்தால் போதும் என்ற கடைப்பாட்டுடன் வாழ்ந்தார். காலங்கள் இனிதே கழிந்தன.

மூத்த மகனான டினேஷ்பாபு நளாயினி என்னும் மணமகளை வாழ்க்கைத் துணையாக ஏற்றுத் திருமணம் செய்து கொண்டார் அவர்களது இல்லற வாழ்வின் பயனாக ரகு பிரசாத், திவாகரன், பிரித்திகா ஆகிய அன்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களைப் பெற்றதனால் பிள்ளைகளுடனும் கொஞ்சி மகிழ்ந்து பாசத்துடன் இன்புற்றிருந்தார்.

அவர் விரும்பிச் செய்த தொழில் வியாபாரமாக இருந்தாலும். ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளையில் மலர்களைப் பறித்து ஆலயங்களுக்குக் அவற்றைக் கொடுப்பதில் மிகவும் மனநிறைவு கண்டார் ஆலயங்களுக்கு மட்டுமல்லாமல் தன்னிடம் யாராவது பூக்களை விரும்பிக் கேட்டால் கூட அவர்களுக்கும் அவற்றைக் கொடுப்பதில் பின் நிற்கவில்லை அன்னார் தன் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் பிறருக்கும் உதவி செய்யும் மனம் கொண்டவர். இரக்க சிந்தையுடன் மற்றவர்கள் துன்பப்படுவதைக் காணச் சகிக்க மாட்டாதவர் அன்னார் மிகிந்தபுரத்தில் வாழ்ந்த போதிலும் ஒவ்வொரு நாளும் திருகோணமலை நகருக்கு வந்து சகோதரர்கள். உற்றார் உறவினர் நண்பர்களுடன் அளவளாவிச் செல்வது வழக்கமாக இருந்தது. அவர் சகோதர்களுடன் எவ்வளவு பாசமாக இருந்தாரோ அதேபோல் அவர்களும் அவர்மேல் மிகுந்த பாசம் கொண்டிருந்தனர்.

இதுவரை காலமும் தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று அவர் நினைத்ததில்லை. ஆனால் கடந்த 12.03.2014 இல அவரது 70 வயது பூர்த்தியடைவதை எண்ணி மனைவி மக்கள் பேரப்பிள்ளைகளுடன் வீட்டோடு அதனைக் கொண்டாடி மகிழ்ந்தார். இதுவே தனது இறுதிப் பிறந்தநாள் என்பதை அவர் முன்கூட்டியே அறிந்திருந்தாரோ. என்னவோ யார் அறிவார்கள்?

அவருக்கு சைக்கிள் ஓடுவதென்றால் அலாதிப் பிரியம் மிகிந்தபுரத்திலிருந்து சைக்கிளிலேயே திருகோணமலை நகருக்கு வருவது கஷ்டமாக இருந்தாலும் அவர் அதையிட்டு சிறிதும் கவலைப்படாமல் வந்து எல்லோரையும் சந்தித்து அளவளாவிச் செல்வார். இவ்வளவு விரைவாக சைக்கிள் ஓடுகிறாரே என்று எல்லோரும் அதிசயப்பட்ட வேளையில் இடி என ஒரு சில வாரங்களாக அவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள் ஓட முடியாமல் போனது. அவருக்கு ஏற்பட்ட சுவாசப்பை அழற்சி நோயினால். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். தனது நோய் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லிக் கவலைப்பட வைக்க அவர் விரும்பவில்லை. மனைவி, மக்கள், மருமகள் பேரப்பிள்ளைகளுடன் வழக்கம் போலவே தனது உடல் நிலை பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் இருந்தார்.

ஆயினும் விதியை வெல்ல யாரால் முடியும், பிறப்புண்டேல் இறப்பும் உண்டு என்பது சான்றோர் வாக்கு. அதற்கு யாரும் விதி விலக்கல்ல. என்று புரட்டாதி மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அமரர். படுக்கையில் சிறிது சோர்வாகப் படுத்திருந்தார். வழக்கம் போல் எழுந்து நடமாடவில்லை காலை உணவை மட்டும் மனைவி மருமகள் ஊட்டி விட உண்டார். அதன் பின் அவர் எதுவும் பேசாமல் படுத்திருந்தார். மதியம் 1.30 மணிஎளவில் அப்பா கொஞ்ச நேரம் எழுந்து இருங்கள் என்று சொல்லியபடி தந்தையாரை தனது மடியில் இருத்துவதற்காக மூத்த மகன் அவரைத் தூக்கி மடியில் இருத்திய போது அவருடைய உயிர் அவரை விட்டுப் பிரிந்தது மனைவி மக்கள் மருமகள் பேரப்பிள்ளைகள் என்று எல்லோரும் கலங்கி நிற்க அவரது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. அவரது பிரிவால் அவரைச் சார்ந்த அனைவருக்கும் மீளாத் துன்பத்தைத் தந்தாலும் அவரது ஆன்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப் போமாக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்

பண் – புறநீர்மை



1. நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனைப் நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடைமுடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே

(7ம் பாடல் கிடைக்கவில்லை)

8. எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

9. அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறிய லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும் உடனாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொன்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே

11. குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்ற முமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானி டைப்பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

### 1. கணேச காயத்ரி

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே

வக்ர துண்டாய தீமஹி

தன்னோ புத்தி : ப்ரசோதயாத்

### 2. நரசிம்ம காயத்ரி

ஓம் உக்ர ந்ருசிம்ஹாய விதமஹே

வஜ்ர நகாய தீமஹி

தன்னோ ந்ருசிம்ஹ : ப்ரசோதயாத்

### 3. விஷ்ணு காயத்ரி

ஓம் நாராயணாய வித்மஹே

வுாஸ் தேவாய தீமஹி

தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்

### 4. சிவ காயத்ரி

ஓம் பஞ்ச வக்த்ராய வித்மஹே

மஹாதேவாய தீமஹி

தன்னோ ருத்ர ப்ரசோதயாத்

### 5. ராதா காயத்ரி

ஓம் வருஷபானுஜாய வித்மஹே

க்ருஷ்ண ப்ரியாவை தீமஹி

தன்னோ ராதை ப்ரசோதயாத்

### 6. கிருஷ்ண காயத்ரி

ஓம் தேவகீ நந்தனாய விதமஹே

வுாஸ்தேவாய தீமஹி

தன்னோ கிருஷ்ணா, ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7. கணேச காயத்ரி

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தன்னோ புத்தி : ப்ரசோதயாத்

### 8. அக்னி காயத்ரி

ஓம் மஹாஜ்வாலாய விதமஹே
அக்னி தேவாய தீமஹி
தன்னோ அக்னி: ப்ரசோதயாத்

### 9. இந்த்ர காயத்ரி

ஓம் ஸஹஸ்ர நேத்ராய வித்மஹே
வஜ்ர ஹஸ்தாய தீமஹி
தனனோ இந்த்ர : ப்ரசோதயாத்

### 10. சிவ காயத்ரி

ஓம் ஸரஸ்வத்யை விமதஹே
ப்ரஹம பத்னியை தீமஹி
தன்னோ தேவீ ப்ரசோதயாத்

### 11. துர்க்கா காயத்ரி

ஓம் கிரிஜாவை வித்மஹே
சிப்பிரியவை தீமஹி
தன்னோன துர்கா: ப்ரசோதயாத்

### 12. அனுமன் காயத்ரி

ஓம் அஞ்சனீ சுதாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தன்னோ மாருதி ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பூமா காயத்ரி

ஓம் ப்ருதீ தேவ்யை வித்மஹே
ஹைஸ்ர மூர்த்தியை தீமஹி
தன்னோ ப்ருத்வீ ப்ரசோதயாத்

## 14. சூர்ய காயத்ரி

ஓம் பாஸ்கராய வித்மஹே
திவாகாய தீமஹி
தன்னோன ஸூர்ய : ப்ரசோதயாத்

## 15. ராம காயத்ரி

ஓம் தசரதாத்மாஜாய வித்மஹே
சீதா வல்லபாயை தீமஹி
தன்னோ ராம ப்ரசோதயாத்

## 16. சீதா காயத்ரி

ஓம் ஜனக நந்தினியை வித்மஹே
பூமிஜாயை தீமஹி
தன்னோ ஸீதா ப்ரசோதயாத்

## 17. சந்த்ர காயத்ரி

ஓம் சஷீர புத்ராய வித்மஹே
அம்ருத தத்வாய தீமஹி
தன்னோ சந்த்ர : ப்ரசோதயாத்

## 18. யம காயத்ரி

ஓம் ஸூர்யபுத்ராய வித்மஹே
மஹாகாலாய தீமஹி
தன்னோ யம: ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. ப்ரஹ்ம காயத்ரி

ஓம் சதுர்முகாய வித்மஹே
ஹன்ஸாருடாய தீமஹி
தன்னோ ப்ரஹ்ம ப்ரசோதயாத்

## 20. வருண காயத்ரி

ஓம் ஜல விந்தாய வித்மஹே
நீல புருஷாய தீமஹி
தன்னோ வருண ப்ரசோதயாத்

## 21. நாராயண காயத்ரி

ஓம் நாராயண வித்மஹே
வுாஹு^ேதவாய தீமஹி
தன்னோ நாராயண ப்ரசோதயாத்

## 22. துளசி காயத்ரி

ஓம் ஶ்ரீ துளஸ்யை வித்மஹே
விஷ்னு ப்ரியாவை தீமஹி
தன்ணோ வ்ருந்தா ப்ரசோதயாத்

## 23. ஹன்ச காயத்ரி

ஓம் பரமஹன்ஸாய வித்மஹே
மஹா ஹன்சாய தீமஹி
தன்னோ ஹன்ச ப்ரசோதயாத்

## 24. குரு காயத்ரி

ஓம் ரிஷிபத் பஜாய வித்மஹே
ஶ்ரீனி ஹஷ்தாய தீமஹி
தன்னே குரு ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை**
**நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்–கோலம்செய்**
**துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா.**

விநாயகப்பெருமானே அடியேனுடைய பூஜையையும் நிவேதனத்தையும் ஏற்றுக்கொண்டு, இயல்,இசை,நாடகம் என்னும் முத்தமிழ்ச் செல்வத்தையும் எனக்கு அருள் புரிய வேண்டும்

❋ ❋ ❋

### நூல்

**புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை**
**மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்–என்னும்கால்**
**ஈது ஒழிய வேறு இல்லை : எச்சமயத்தார் சொல்லும்**
**தீது ஒழிய நன்மை செயல்** (1)

முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களே இப்பிறப்பில் தேடி வைத்த பொருளாகும்: தீமையை விலக்கி நன்மையைச் செய்வதே எல்லா மதத்தினரும் போதிக்கும் உபதேச மொழியாகும்.

❋ ❋ ❋

**சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை: சாற்றும் கால்**
**நீதி வழுவா நெறி முறையின்– மேதினியில்**
**இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்**
**பட்டாங்கில் உள்ள படி** (2)

இரண்டே சாதிகள்தான் உலகிலே உள்ளன: துன்புறுவோர்க்கு உதவி புரிவோர் உயர்ந்த சாதியினர் : உதவி புரியாதவர்-தாழ்ந்த சாதியினர்:உண்மை நூல்கள் போதிப்பதும் இதுவே.

❋ ❋ ❋

**இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்பு இது அன்றே**
**இடும் பொய்பை மெய் என்று இராதே–இடும் கடுக**
**உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலி நோய்**
**விண்டாரைக் கொண்டாடும் வீடு** (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையற்ற இவ்வுடலை நிலையானது என்று எண்ணிக் கொண்டிருக்காமல் விரைவாக தர்மம் செய்வீர்களாக. பந்தபாசங்களை நீக்கியவர்களைப் போற்றுவர், முக்தி அடைவர்

❋ ❋ ❋

**எண்ணிஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது**
**புண்ணியம் வந்து எய்து போது அல்லால்–கண் இல்லான்**
**மாங்காய் விழ எறிந்த மாத்திரை கோல் ஒக்குமே**
**ஆங்காலம் ஆகும் அவர்க்கு (4)**

ஒருகாரியத்தைச் செய்ய முற்பட்டாலும் புண்ணியமான காலத்திலே தான் அது கை கூடும். மற்ற காலத்தில் செய்ய எண்ணுவது.பார்வை யற்றவன் மாங்காய் பறிக்க மந்திரக் கோலை வீசியது போலாகும்

❋ ❋ ❋

**வருந்தி அழைத்தாலும் வாராத வாரா**
**பொருந்துவன போமின் என்றால் போகா– இருந்து ஏங்கி**
**நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில் (5)**

எவ்வளவுதான் முயன்ற போதிலும் கிடைக்கக் கூடியவைதான் கிடைக்கும் கிடைக்க வேண்டியதை வேண்டாம் என்று வெறுத்தாலும் விட்டு நீங்காது இதை உணராமல், நினைத்து, மனம் நொந்து வாடிமாண்டு போவதே மனிதரின் தொழில் ஆகிவிட்டது.

❋ ❋ ❋

**உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்**
**கொள்ளக் கிடையா குவலயத்தில் வெள்ளக்**
**கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்**
**உடலோடு வாழும் உயிர்க்கு (6)**

இவ்வுலகில் வாழ்பவர்க்கு கிடைக்கக்கூடியதே கிடைக்கும். பிறர் சுகம் அனுபவிக்கக் கிடையாது கடல் கடந்துபோய் பொருள் ஈட்டித் திரும்பினாலும் கிடைப்பதுதான் கிடைக்கும்.

❋ ❋ ❋

**எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு**
**பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை–நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல்**
**பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு (7)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வகையாலும் நினைத்துப் பார்த்தால் இந்த உடலானது பலவிதமான நோய்களுக்கு இருப்பிடமாகும் அறிவுடையோர் இதை அறிந்திருப்பதோடு,இதைப்பற்றி எவரிடமும் பேசாமல் தாமரை இலைத்தண்ணீர்போல வாழ்வர்.

❋ ❋ ❋

**ஈட்டும்பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்**
**கூட்டும்படி அன்றிக் கூடாவாம்—தோட்டம்**
**மரியாதை காணும் மகிதலத்தீர் கேண் மின்**
**தரியாது காணும் தனம் [8]**

உலகில் வாழ்பவர்களே,பெரு முயற்சியால் அளவற்ற செல்வத்தைத் தேடினாலும் மரியாதை ஒன்றே நிலையாக இருக்கக் கூடியது

❋ ❋ ❋

**ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு**
**ஊற்றுப் பெருக்காம் உலகு ஊட்டும்—ஏற்றவர்க்கு**
**நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்**
**இல்லை என மாட்டார் இசைந்து [9]**

ஆற்றலே வெள்ளம் வடித்து, வெப்பத்தால் மணல் சுட்ட போதிலும் மக்களுக்கு ஊற்று நீர் வழங்குவதுபோல் நல்ல குடும்பத்தினர் வறுமை நிலையில் இருந்து போதிலும் வந்த யாசிப்பவருக்கு இல்லை என்று கூறாமல் இயன்றதைக் கொடுப்பர்

❋ ❋ ❋

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவாரோ? மா நிலத்தீர் – வேண்டாம்**
**"நமக்கும் அது வழியே : நாம் போம் அளவும்**
**எமக்கு என" இட்டு உண்டு இரும் [10]**

இறந்தவரை நினைத்து வருடக் கணக்கில் அழுது புலம்பிக் கொண்டிருந்த போதிலும் அவர் ஒரு போதும் திரும்பி வரப்போவதில்லை நாமும் ஒரு நாள் அவ்வாறே போக வேண்டியதுதானே!என்று எண்ணி,இருக்கும் வரையில் தர்மங்கள் நன்றாகச் செய்து சுகமாக இருப்பீர்களாக.

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
ஒரு நாளுக்கு ஏன் என்றால் ஏலாய்—ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிரே
உன்னோடு வாழ்தல் அரிது (11)

தினந்தோறும் உண்பதை ஒழிக்க இயலாது! இரண்டு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் உண்ணவும் முடியாது என்னுடைய துன்பத்தை உணராத இந்த வயிறுடன் வாழ்வது மிகவும் சிரமம்.

❋ ❋ ❋

ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே—ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு (12)

ஆற்றங்கரையில் இருக்கும் மரம்கூட அறியும்படி, அரசு மரியாதையோடு வாழ்ந்த வாழ்வும்கூட, ஒரு நாள் அழிந்து விடும் ஆனால் வேளாண்மை செய்து வாழ்வதற்கு இருக்கும் சிறப்பு வேறு எந்தத்தொழிலுக்கும் இல்லை

❋ ❋ ❋

ஆவாரை யாரோ அழிப்பார்? அது அன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய் அம்புவி அதன் மேல் (13)

உண்மையோடு உலகில் வாழ்பவரை எவராலும் அழிக்க முடியாது மரணம் அடையக் கூடியவரை தடுத்து நிறுத்தவும் இயலாது தினந்தோறும் பிச்சை எடுத்து திரிவோரையும் நிறுத்த முடியாது

❋ ❋ ❋

பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி இடித்து உண்கை—சீச்சி
வயிறு வளர்ச்சிக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும் (14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சை எடுத்து உண்பதைக் காட்டிலும் இழிவானது பிறரிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி, அவமானத்துக்கு ஆளாகி வயிறு வளர்ப்பதாகும் அதைக் காட்டிலும் மானத்தோடு உயிரைத் துறப்பது உயர்வாகும்.

❋ ❋ ❋

**சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு**
**அபாயம் ஒரு நாளும் இல்லை—உபாயம்**
**இதுவே: மதியாகும் அல்லாத எல்லாம்**
**விதியே மதியாய் விடும் (15)**

பஞ்சாட்சர மந்திரத்தை தினந்தோறும் தியானிப்பவர்களுக்கு ஒரு கெடுதலும் நேராது இதுவே துன்பத்தில் நீக்க வழி மற்றவை யாவும் விதிப்படியே ஆகும்.

❋ ❋ ❋

**தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்**
**கண் நீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை**
**கற்பு அழியா ஆற்றல்!கடல் சூழ்ந்த வையகத்துள்**
**அற்புதமாம் என்றே அறி (16)**

நிலத்தின் தன்மையால் தண்ணீரையும்,ஈயும் தன்மையால் நல்லவர்களுடைய சுபாவத்தையும் கருணை மிகுந்தபார்வையால் கண்களில் பெருமையையும், கற்பு நெறியால் பெண்களின் நேர்மையையும் காணலாம். இவையே உலகில் வியக்கத்தக்கது என அறிவீர்களாக!

❋ ❋ ❋

**செய்வினை தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இரு நிதியம்?—வையத்து**
**அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று**
**வெறும் பானை பொங்குமோ மேல்! (17)**

முற்பிறவியல் செய்த தீவினையால் துன்புறும் போது தெய்வத்தை நொந்து கொண்டால் செல்வம் யாவும் சேர்ந்து விடுமா? வாழ்ந்த காலத்தில் பாவத்தை நீக்க வழங்காதவர்களுக்கு இப்பொழுது வெற்றுப் பானை பொங்கிவிடுமா?

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்**
**உற்றார் உகந்தார் என் வேண்டார்—மற்றோர்**
**இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே**
**சரணம் கொடுத்தாலும் தாம்** **[18]**

பெற்றோர்,கூடப்பிறந்தவர்,ஊர்க்காரர்,உறவினர்,பிரியமானவர் வேண்டாத உலோபிகள் தங்களைத் துன்புறுத்தியவர்களுக்கே கொடுப்பார்கள் மற்றபடி அவர்கள் காலில் வீழ்ந்து பணிந்தாலும் கொடுக்கமாட்டார்கள்

❋ ❋ ❋

**சேவித்தும் சென்று இரந்தும் தென் நீர்க்கடல் கடந்தும்**
**பாவித்தும் பாராண்படும் பாட்டு இசைத்தும் போவிப்பம்**
**பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி அரிசிக்கே நாம்.** **[19]**

பசியின் கொடுமை தாளாமல் பிறரையும் யாசித்தும் கடல் கடந்து சென்றும் அறிவற்றவரை பெரிய மனிதராகக் கருதியும் புகழ்ந்து பாடியும் ஒரு படி அரிசிக்காக இந்த உடலைப் போக்குகிறோம்.

❋ ❋ ❋

**அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்**
**கொம்பை முலை பகர்வார் கொண்டாட்டம்—இம்மை**
**மறுமைக்கும் நன்று மாநிதியம் போக்கி**
**வறுமைக்கு வித்தாய் விடும்** **[20]**

அம்மிக்கல்லை துணையாக கட்டிக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் இறங்குவது போல் விலைமகளை விரும்பி ஆசைப்பட்டுப் பெரும் செல்வத்தை அழித்து இன்புறுவது வறுமைக்கு ஆளாக இப்பிறப்பிலும் அடுத்த பிறப்பிலும் துன்புற நேரிடும்.

❋ ❋ ❋

**நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்**
**பேரும் புகழும் பெரு வாழ்வும்—ஊரும்**
**வருந்திருவும் வாழ் நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்**
**தரும் சிவந்த தாமரையாள் தான்** **[21]**

வஞ்சனை இல்லாதவர்க்கு நீர்? வீடு நெல் பெயர் புகழ் சிறப்பான வாழ்வு கிராமம் வளரும் செல்வம் நீடித்த ஆயுள் ஆகியன திருமகளின் திருவருளால் எந்நாளும் கிடைக்கும்.

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட
மானிடரே கேளுங்கள் கூடு விட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகள் அந்தப் பணம் (22)

வருந்தி உழைத்துத் தேடிய செல்வத்தை கொண்டு தானும் சுகப்படாமல், பிறருக்கும் வழங்காமல், பூமியில் புகைத்து வைத்து அலையும் கேடு கெட்ட மனிதர்களே உங்களுடைய உயிர் போன பிறகு அந்தப் பணத்தை யார் அனுபவிப்பார்?

❋ ❋ ❋

வேதாளம் சேரும் வெள் எருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை (23)

நீதிமன்றத்தில் ஒரு சார்பாக (நடுநிலை இல்லாமல்) நீதி வழங்குபவர் வீட்டிலே பேய்கள்,மூதேவி,பாம்புகள் முதலியன குடி இருப்பதோடு எருக்கம் பூவும் பாதாள மூலிக்கொடியும் படர்ந்து பாழ் அடைந்து போகும்.

❋ ❋ ❋

நீறு இல்லா நெற்றி பாழ் நெய் இல்லாத உண்டிபாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்—மாறு இல்
உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ் பாழே
மடக் கொடி இல்லா மனை (24)

திருநீறு அணியாத நெற்றி,நெய் இல்லாத உணவு, நதி அல்லாத ஊர் கூடப் பிறவாத பிறப்பு, மனைவி இல்லாத வீடு இவை யாவும் சிறப்புடையன அல்ல.

ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்
மானம் அழிந்து மதி கெட்டுப்—போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு (25)

முதலுக்குமேல் செலவு செய்பவன் மானம் கெட்டு அறிவு இழந்த திருடனாகி,ஏழு பிறப்பிலும் தீயவனாகி நல்லவர்களுக்கும் பொல்லாதவன் ஆவான் என்பதை அறிவாயாக!

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை–தேனின்
கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம் [26]

பெருமை,குடும்பப் பெருமை,படிப்பு,அழகு, உண்மை,உயர்வு, ஈகை, நோன்பு,உயர்வு,தொழில்,முயற்சி, மங்கையரிடம் ஆசை ஆகிய பத்தும் பசி வந்துவிட்டால் பறந்து ஓடிவிடும்

❋ ❋ ❋

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்து எய்தும்–ஒன்றை
நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்
எனை ஆளும் ஈசன் செயல் [27]

ஒன்றை நினைத்தால் அதற்கு பதிலாக வேறு ஒன்று கிடைக்கும் அல்லது அதுவே கிடைத்தாலும் கிடைக்கக் கூடும் எண்ணாதது ஒன்று எதிரே வந்து நின்றாலும் நிற்கும் எல்லாம் இறைவனுடைய திருவருளே ஆகும்.

❋ ❋ ❋

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
என்பது கோடி நினைத்து எண்ணுவன–கண் புதைந்த
மாந்தர் குடி வாழ்க்கை மண்ணில் கலம் போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான் [28]

சாப்பிடுவது ஒருபடி சோறு. உடுத்திக் கொள்வது நான்கு முழுவேஷ்டி ஆனால் எண்பது கோடி காரியங்களை நினைத்துக் கொண்டிருக்கும் கண்மூடித்தனமான இந்த மனித வாழ்வானது உயிர் உள்ளவரை துன்பமாத்தான் இருக்கும்.

❋ ❋ ❋

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை–சுரந்து அமுதம்
கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர் [29]

மரத்தில் பழம் பழுத்திருக்கும் பொழுது வௌவாலை யாரும் கூவி அழைப்பது இல்லை. பசு கன்றுக்குப் பால் சுரந்து கொடுப்பது போல், தாராளமாக அள்ளிக் கொடுத்தால் உலகத்தில் உள்ள எல்லோரும் உறவினரைப் போல் வந்து கூடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்**
**பூந்தாரை யோன் வழியே--வேந்தே**
**ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா**
**வெறுத்தாலும் போமோ விதி** **[30]**

முன் பிறவியிலே, அவரவர் செய்த நல்வினை தீவினைகளை பரமன் விதித்தபடியே அனுபவிப்பார்கள் தீவினை செய்தவர்களை நாம் என்ன செய்ய இயலும்? ஊர் முழுதும் ஒன்று திரண்டு வெறுத்தாலும் விதி விட்டுப் போகுமா?

❋ ❋ ❋

**இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்**
**ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று– வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கு அஞ்சாத**
**தாரத்தின் நன்று தனி** **[31]**

குற்றம் உடைய பாட்டும் ஒழுக்கம் இல்லாத உயர் குடும்பமும் தவறான வீரமும் பிறர் பழிக்கு ஆளான மனைவியுடன் வாழ்வதும் துன்பத்தைத் தரும்.

❋ ❋ ❋

**ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்**
**மாறிடும் ஏறிடும் மாநிலத்திர்–சோறு இடும்**
**தண்ணீரும் வாரும் தருமே சார்பாக**
**உண்ணீர்மை வீறும் உயர்ந்து** **[32]**

செல்வமானது ஆற்று வெள்ளத்தின் மேடு பள்ளம் போன்றது ஆகையால் செல்வம் இருக்கும் பொழுதே யாசிப்பவருக்கு உணவும் நீரும் வழங்குங்கள் அந்தத் தர்மத்தின் பயனாக உள்ளத்திலே தூய்மை பொலிவுறும்.

❋ ❋ ❋

**வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்**
**பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்பு**
**பாரைக்கு நெக்கு விடாப்பாறை பசுமரத்தின்**
**வேருக்கு நெக்கு விடும்** **[33]**

யானை மேலே பாயும் அம்பானது பஞ்சுப் பொதியில் பாயாது கடப்பாறைக்குப் பிளக்காத கற்பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்து கொடுக்கும் கடுமையான சொல்லானது இனிமையான சொல்லை வெற்றிக் கொள்ளாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்று அங்கு எதிர் கொள்வர்— இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல் (34)

படியாதவன் என்றாலும் அவனிடம் பணம் இருந்தால் எல்லோரும் அவனை மதிப்பார்கள் பணம் இல்லாதவனை அவன் மனைவியுடம் பெற்ற தாயும் கூட விரும்பமாட்டார்கள் அவன் பேச்சுக்கு மதிப்பு இருக்காது.

❋ ❋ ❋

பூவாதே காய்க்கும் மரமும் உளமக்கள் உளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே—தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு (35)

பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் இருப்பதைபோல் மனிதர்களிடையேயும் குறிப்பு அறிந்து செயலாற்றக் கூடியவர்களும் இருக்கின்றனர். நன்றாக விதைத்த போதிலும் முளைக்காத விதையைப் போல என்ன சொன்னாலும் உணர முடியாத மூடர்களும் இருக்கின்றனர்.

❋ ❋ ❋

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல்—ஒண்தொடி
போதம் தனம் கல்வி பொன்ற வரும் காலம் அயல்
மாதர் மேல் வைப்பார் மனம் (36)

நண்டு, முத்துச்சிப்பி, வாழை, மூங்கில், ஆகியவற்றின் கருவே அவற்றை அழித்துவிடும் ஒருவருடைய ஞானம்,செல்வம், வித்தை அழியும் காலத்தில் பிற பெண்களை நாடிச் செல்வர்

❋ ❋ ❋

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம் அனைத்தாய
நூலகத்தும் இல்லை—நினைப்பது எனக் கண்ணுறுவது
அல்லால் கவலைப் படேல் நெஞ்சேமெய்
விளர் உறுவார்க்கு இல்லை விதி (37)

பிறவியால் உண்டாகும் வினைப்பயனை வெற்றி காண்பதற்கு வேதம் முதலான நூல்களில் ஆதாரம் இல்லை முக்தி நெறியாகிய தியான சமாதிகளில் ஆழ்ந்திருப்போருக்கு நினைப்பது போலத் தோன்றும் விதி அவர்களைத் துன்புறுத்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்
அன்று என்றும் ஆம் என்றும் ஆகாது–நின்ற நிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள் (38)

நல்லது,தீயது,நான்,அவன்,இல்லை,ஆம் ஆகிய பேதங்களைக் கடப்பதே தான் அது வாழும் உண்மைப் பொருள் ஆகும்: புல்லை அறுத்தவர் அதைக் கட்டுவதற்கு கயிறைக் தேடிச் சென்றதைப் போல இறைவன் எங்கோ இருப்பதாக எண்ணி அலைவது வீணாகும்.

❋ ❋ ❋

முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை
தப்பாமல் தன்னுள் பொறான் ஆயின்–செப்பும்
கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகுமாம் மூப்பு [39]

முப்பது வயது அளவில் காமம், வெகுளி,மயக்கம் ஆகிய மூன்றையும் ஒழித்து மெய்ப் பொருளான இறைவனை அடையும் வழியை அறியாதவன் கிளிப்பிள்ளையைப் போல கற்றதையே உருப்போட்டு ஒப்பவிப்பவன் போன்றவன் ஆவான்.

❋ ❋ ❋

தேவர் குமனும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும்–கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்று உணர் (40)

திருக்குறள்,தேவாரம்,திருக்கோவையார்,திருவாசகம்,நான்கு வேதங்களின் உபநிடதங்கள் திருமந்திரம் ஆகிய அனைத்தும் ஒரு பொருளையே உணர்த்துகின்றன என்பதை அறிந்து கொள்வாயாக.

**(நல்வழி மூலமும் உரையும் முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்.
## கனகசபாபதி கனகதுங்கம்

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கு நல்வழி காட்டி, வாழவைத்த எம் அன்பு தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி சலுத்தியும்,பதாதைகள் காட்சிப்படுத்திய நிறுவனங்களுக்கும் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தந்தியில் அனுதாபம் தந்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டும் எமக்கு ஆறுதல் கூறிய உற்றார்,உறவினர்,நண்பர்கள் மற்றும் அனைத்து நெஞ்சங்களிற்கும் எம் இதயம் கனிந்த என்றும் மறவா நன்றியை நவில்கின்றோம்.

குடும்பத்தினர்


மிகுந்தபுரம்
திருக்கோணமலை


- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org